THURSDAY
July 24, 2025
CHENNAI
TAMIL NADU EDITION
14 Pages ₹ 7.00

www.thehindu.com

THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

# Jipmer comes out with dress code for its convocation

M. Dinesh Varma
PUDUCHERRY

The upcoming convocation ceremony for conferment of MBBS and other degrees at Jipmer, will adhere to a stipulated traditional Indian wear dress code for male and female students in place of the flowing black gown and cap.

A notice by the Jipmer administration issued a couple of days ago stated that the Ministry of Health and Family Welfare had approved the following dress code – traditional Indian attire – for the upcoming convocation ceremony.

According to the notice, the approved dress for male graduating students is either off-white, half-collar kurta (full sleeves) with pyjama/pajami or off-white shirt (full sleeves) and dhoti. The footwear code stipulates formal shoes (brown/black) and forbids sneakers, slippers, or sandals. For female students, the approved wear is either off-white saree with gold border with a blouse in gold or base colour of the saree, or off-white "Judithar/Salwar Kameez with Gold border (full sleeves)".

Women are allowed to wear sandals but only those "which should not create noise while walking".



The dresses approved by the Union Health Ministry for the upcoming Jipmer convocation. SPECIAL ARRANGEMENT

"Hence, all graduating students who will be receiving their degrees in person during the upcoming Convocation are hereby informed to strictly adhere to the above dress code....". "No graduating student will be allowed to attend the Convocation in a dress other than the specified for the Convocation," the notice stated.

By way of offering more clarity on what attire makes the cut, the notice also attached images of the sets of dual option of dresses deemed acceptable for the convocation ceremony.

According to an official source in Jipmer, the institution is only implementing a proposal sent by the Union Ministry, and its role was limited to offering suggestions on culturally appropriate options of attire. The Ministry has now approved what is acceptable for convocation ceremonies in Jipmer, the official added.

The Union Health Ministry has, since at least the last year, been pushing Centrally-administered hospitals and medical teaching institutes to do away with the colonial-era vestige at convocations and, instead adopt region-specific Indian traditional dress.

Past attempts for revising the dress code for convocations in favour of traditional wear have evoked mixed reactions – those who hail it as another step towards decolonisation and critics who see them as political tools of revivalism.

Jipmer is yet to finalise the convocation date, sources said. The exact date and timing of the convocation will be published shortly on the Jipmer website. Graduation stoles will be provided on the convocation day.

இந்து தமிழ் திசை

பட்டம் பெறுவோருக்கு புதிதாக ஆடை கட்டுப்பாடு

# புதுச்சேரி ஜிப்மர் பட்டமளிப்பு விழாவில் பாரம்பரிய ஆடை அணியாவிட்டால் அனுமதியில்லை

■ புதுச்சேரி

பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுவோருக்கு ஆடை கட்டுப்பாட்டை விதித்து, புதுச்சேரி ஜிப்மர் மருத்துவக் கல்லூரி நிர்வாகம் புதிய உத்தரவு பிறப்பித்துள்ளது. பாரம்பரிய ஆடை அணியாவிட்டால் அனுமதியில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுவோர் கருப்பு அங்கியை அணிவது வழக்கம். ஆனால் சமீபத்தில், மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம், பட்டமளிப்பு விழாக்களில் இந்திய பாரம்பரிய உடைகளை அணியுமாறு அறிவுறுத்தியது. மாணவர்கள் தங்கள் மாநிலத்தின் கலாச்சாரத்துக்கு ஏற்ப உடைகளை வடிவமைத்துக் கொள்ளலாம் என்று கூறப்பட்டது.

இந்தச் சூழலில், புதுச்சேரியில் உள்ள மத்திய அரசின் தன்னாட்சி அந்தஸ்து பெற்ற ஜவஹர்லால் பட்டமேற்படிப்பு மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் (ஜிப்மர்) பட்டப் படிப்பை முடித்தவர்களுக்கான பட்டமளிப்பு விழா விரைவில் நடைபெற இருக்கிறது. இதற்கிடையே, ஜிப்மர் நிர்வாகம் பட்டம் பெறுவோருக்கு புதிய உத்தரவை பிறப்பித்துள்ளது.





● ஜிப்மர் தரப்பில் வெளியிடப்பட்டுள்ள பட்டமளிப்பு விழா ஆடை மாதிரி.

பட்டமளிப்புக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ள மருத்துவர்களுக்கான சுற்றறிக்கையில், பட்டமளிப்பு விழா ஆடை கட்டுப்பாடுகளின் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய பாரம்பரிய உடையில் தான் பட்டம் பெற மாணவர்கள் வரவேண்டும். பாரம்பரிய உடை அணியாதவர்கள் பட்டமளிப்பு விழாவில் அனுமதிக்க மாட்டார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆண்களுக்கான இந்திய பாரம்பரிய உடை என வெள்ளை நிற முழுக்கை சட்டையுடன் பைஜாமா அல்லது வெள்ளை நிற வேட்டி அணிந்து கருப்பு அல்லது மெரூன் ஷூ அணிந்து வர வேண்டும். பெண்களுக்கான இந்திய பாரம்பரிய உடை என தங்க நிற பார்டருடன் கூடிய வெள்ளை நிற சேலையுடன் தங்க நிற ஜாக்கெட் அணிய வேண்டும். அல்லது தங்க நிற பார்டர் உடன் வெள்ளை நிற முழுக்கை சுடிதார் அல்லது சல்வார் கமீஸ் அணியலாம். சத்தம் எழுப்பாத சாண்டல்சை காலணியாக அணிந்து வர வேண்டும் என புகைப்படங்களுடன் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பட்டம் பெறும் மருத்துவர்கள் மத்தியில் இதற்கு அதிருப்தி கிளம்பியுள்ளது.

இதுபற்றி விசாரித்தபோது, "ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் நாடு முழுதும் இருந்து பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர்.

இவர்களுக்கு வெவ்வேறு பாரம்பரிய உடைகள் இருக்கலாம். ஆனால் உத்தரவில் குறிப்பிட்ட ஆடைகள் அனைத்தும் குறிப்பிட்ட சில பகுதிகளின் பாரம்பரிய உடையை குறிப்பிடுவது போல் இருக்கிறது.

கருப்பு அங்கிகள் அணிவது என்பது காலனித்துவ காலத்தின் அடையாளம். அதைத் தவிர்க்க பாரம்பரிய உடைகள் அணிய மத்திய சுகாதார அமைச்சகம் பரிந்துரைத்தது. ஒவ்வொரு மாநிலத்தின் பாரம்பரிய உடைகள் அணிவதால், மாணவர்கள் மத்தியில் ஒற்றுமை உணர்வு ஏற்படும் என கூறப்பட்டது.

ஆனால் குறிப்பிட்ட சில பகுதிகளின் உடைகளை அணியுமாறு திணிக்கின்றனர்" என்று அதிருப்தியுடன் குறிப்பிடுகின்றனர்.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
24.7.2025 (வியாழக்கிழமை)

# பட்டமளிப்பு விழாவில் மாணவர்களுக்கு ஆடை கட்டுப்பாடு

## ஜிப்மர் நிர்வாகம் அறிவிப்பு

புதுச்சேரி, ஜூலை.24-

ஜிப்மர் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு ஆடை கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

### பட்டமளிப்பு விழா

பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் பட்டமளிப்பு விழாவிற்கு வரும் மாணவர்கள் கருப்பு அங்கி அணிவது வழக்கம். ஆனால் சமீபத்தில், மத்திய அரசு பட்டமளிப்பு விழாக்களில் இந்திய பாரம்பரிய உடைகளை மாணவர்கள் அணியுமாறு அறிவுறுத்தியது. மாணவர்கள் தங்கள் மாநிலத்தின் கலாசாரத்திற்கு ஏற்ப உடைகளை அணியலாம் என அறிவித்தது. இதனை பின்பற்றி ஜிப்மர் நிர்வாகம் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கான ஆடை கட்டுப்பாடு குறித்து அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி பாரம்பரிய உடை அணிந்து வந்து தான் பட்டம்பெற வேண்டும்.

### வெள்ளை நிற வேட்டி

ஆண்களுக்கான இந்திய பாரம்பரிய உடை என வெள்ளை நிற முழுக்கை சட்டையுடன் பைஜாமா அல்லது வெள்ளை நிற வேட்டி அணிய வேண்டும். அதனுடன் கருப்பு அல்லது மெரூன் நிறத்தில ஷூ அணிந்திருக்க வேண்டும்.

பெண்களுக்கான இந்திய பாரம்பரிய உடையான தங்க நிற பார்டருடன் கூடிய வெள்ளை நிற சேலை, தங்க நிற ஜாக்கெட் அணிய வேண்டும். அல்லது தங்க நிற பார்டருடன் வெள்ளை நிற முழுக்கை சுடிதார் அல்லது சல்வார் காமீஸ் அணியலாம். சத்தம் எழுப்பாத காலணியை அணிந்து வர வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. பல்வேறு மாநிலங்களை சேர்ந்த மாணவர்கள் படிக்கும் ஜிப்மரில் இந்த ஆடை கட்டுப்பாடு மருத்துவ மாணவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

தினமலர்

# பட்டமளிப்பு விழாவில் பாரம்பரிய ஆடை அணியாவிட்டால் அனுமதியில்லை

## ஜிப்மர் நிர்வாகம் உத்தரவு

**புதுச்சேரி, ஜூலை 24–**

பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுவோருக்கு ஆடை கட்டுப்பாட்டை விதித்து ஜிப்மர் நிர்வாகம் புதிய உத்தரவு பிறப்பித்துள்ளது.

பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுவோர் கருப்பு அங்கியை அணிவது வழக்கம். ஆனால், சமீபத்தில் மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம், பட்டமளிப்பு விழாக்களில் இந்திய பாரம்பரிய உடைகளை அணியுமாறு அறிவுறுத்தியது. மாணவர்கள் தங்கள் மாநிலத்தின் கலாசாரத்துக்கு ஏற்ப உடைகளை வடிவமைத்துக் கொள்ளலாம் என, கூறப்பட்டது.

ஆனால், ஜிப்மர் நிர்வாகம் பட்டம் பெறுவோருக்கு புதிய உத்தரவை பிறப்பித்துள்ளது. புதுச்சேரியில் இயங்கி வரும் மத்திய அரசின் நிறுவனமான ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்தவர்களுக்கான பட்டமளிப்பு விழா விரைவில் நடைபெற உள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்ட மருத்துவர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், பட்டமளிப்பு விழா ஆடையில் கட்டுப்பாடு அறிவிக்கப்பட்டுள்ளது.

பட்டம் பெறும் மாணவர்கள் இந்திய பாரம்பரிய உடையில் தான் வரவேண்டும் என, அறிவிக்கப்பட்டுள்ளது. பாரம்பரிய உடை அணியாதவர்கள் பட்டமளிப்பு விழாவில் அனுமதிக்க மாட்டார்கள் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஆண்களுக்கு வெள்ளை நிற முழுக்கை சட்டையுடன் பைஜாமா அல்லது வெள்ளை நிற வேட்டி அணிந்து கறுப்பு அல்லது மெரூன் ஷூ அணிந்து வர வேண்டும். பெண்கள் தங்க நிற பார்டருடன் கூடிய வெள்ளை நிற சேலையுடன் தங்க நிற ஜாக்கெட் அணிய வேண்டும் அல்லது தங்க நிற பார்டர் உடன் வெள்ளை நிற முழுக்கை சுடிதார் அல்லது சல்வார் காமீஸ் அணியலாம். சத்தம் எழுப்பாத சாண்டல்சை காலணியாக அணிந்து வர வேண்டும் என, அறிவுறுத்தியுள்ளது.

தினகரன்

### பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கும்

# ஜிப்மர் மருத்துவ மாணவர்களுக்கு ஆடை கட்டுப்பாடு

## ஜிப்மர் நிர்வாகம் புதிய உத்தரவு



▶ ஜிப்மர் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கும் மாணவர்கள் அணிய வேண்டிய உடைகள் குறித்து படங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

புதுச்சேரி, ஜூலை 24: ஜிப்மர் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கும் மருத்துவ மாணவர்களுக்கு ஆடை கட்டுப்பாடு விதித்து ஜிப்மர் நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. இது மாணவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரி பட்டமளிப்பு விழாவுக்கு வரும் மாணவர்கள் கருப்பு அங்கியை அணிவது வழக்கம். ஆனால் சமீபத்தில் ஒன்றிய அரசு பட்டமளிப்பு விழாக்களில் இந்திய பாரம்பரிய உடைகளை மாணவர்கள் அணிந்துவருமாறு அறிவுறுத்தியது. மாணவர்கள் தங்கள் மாநிலத்தின் கலாச்சாரத்துக்கு ஏற்ப உடைகளை அணியலாம் என அறிவித்தது. இதனை பின்பற்றி ஜிப்மர் நிர்வாகம், பட்டமளிப்பு விழாவுக்கான ஆடைக்கட்டுப்பாடு குறித்து அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அதில், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் புதுச்சேரியின் ஜிப்மரில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவுக்கு பாரம்பரிய இந்திய உடையை அங்கீகரித்துள்ளது. எனவே, வரவிருக்கும் பட்டமளிப்பு விழாவில் நேரடியாகப் பட்டங்களைப்பெறும் அனைத்து பட்டதாரி மாணவர்களும், ஆடைக்கட்டுப்பாட்டை, கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் எந்த மாணவரும் குறிப்பிடப்பட்ட உடையைத் தவிர வேறு உடையில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

ஆண்களுக்கான இந்திய பாரம்பரிய உடை என வெள்ளை நிற முழுக்கை சட்டையுடன் பைஜாமா, அல்லது வெள்ளை நிற வேட்டி அணிந்து கருப்பு அல்லது பிரவுன் ஷூ அணிந்து வரவேண்டும் என புகைப்படங்களுடன் தெரிவிக்கப்பட்டுள்ளது. சேன்டல்கள், செருப்புகள், ஸ்னீக்கர் அணிந்து வரக்கூடாது.

பெண்களுக்கான இந்திய பாரம்பரிய உடை என தங்க நிற பார்டருடன் கூடிய வெள்ளை நிற சேலை. தங்க நிற ஜாக்கெட், அணியலாம்; அல்லது தங்க நிற பார்டருடன் கூடிய வெள்ளை நிற முழுக்கை சுடிதார் அல்லது சல்வார் கமீஸ் காலணிகளை பொறுத்தவரை நடக்கும்போது சத்தம் எழுப்பாத செருப்புகளை அணிந்து வரவேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பட்டம் பெறும் மாணவர்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஜிப்மர் மருத்துவ கல்லூரியில் நாடு முழுவதும் இருந்தும் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த மாணவர்கள் படித்து வருகின்றனர். இவர்கள் தங்கள் மாநிலத்தில் வெவ்வேறு பாரம்பரிய உடைகள் இருப்பதாகவும், ஆனால் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆடைகள் அனைத்தும் கேரள பாரம்பரிய உடையை குறிப்பதாக அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
24.7.2025 (வியாழக்கிழமை)

## ஜிப்மர் எம்.பி.பி.எஸ். மாணவர்களுக்கான

# திருத்தப்பட்ட தேர்வு அட்டவணை வெளியீடு

புதுச்சேரி, ஜூலை.24-

புதுவை ஜிப்மர் மருத்துவக்கல்லூரி நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் கடந்த 2020-ம் ஆண்டு சேர்ந்த எம்.பி.பி.எஸ். மாணவர்களுக்கான எழுத்துத்தேர்வு மற்றும் செய்முறை தேர்வு அட்டவணை அண்மையில் வெளியிடப்பட்டு இருந்தது. தற்போது அந்த தேர்வு அட்டவணை திருத்தம் செய்யப் பட்டுள்ளது. அதன்படி நாளை (வெள்ளிக்கிழமை) மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம் முதல் தாள், நாளை மறுநாள் (சனிக் கிழமை) மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம் 2-ம் தாள், வருகிற 28-ந்தேதி அறுவை சிகிச்சை முதல் தாள், 29-ந்தேதி அறுவை சிகிச்சை 2-ம் தாள், 31-ந்தேதி குழந்தை மருத்துவம் ஆகிய எழுத்து தேர்வுகள் நடக்கிறது.

செய்முறைத் தேர்வுகள் வருகிற 4-ந்தேதி தொடங்கி 7-ந்தேதி வரை நடக்கிறது. அதன்படி 4-ந்தேதி மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம், 5-ந்தேதி மருத்துவம், 6-ந்தேதி அறுவை சிகிச்சை, 7-ந்தேதி குழந்தை மருத்துவம் ஆகிய செய்முறை தேர்வுகள் நடக் கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.